1981 மார்ச் 4]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, 50 ஆண்டு காலமாக இந்த நில அளவை மேம்பாட்டுத் திட்டம் கைவிடப்பட்டு, நடைமுறையில் இல்லாமல் இருந்ததால் மாநிலம் பூராவிலும் இப்படிப்பட்ட குறைபாடு இருந்துகொண்டிருக் கிறது. மாநிலம் பூராவையும் எடுத்துக்கொண்டு, எல்லா இடங்களிலும் ஒரே காலத்தில் மேம்பாடு செய்ய முடியாது, ஆகவே, இன்றைக்கு 28 வட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, வேலை நடந்துகொண்டிருக்கிறது. அடுத்த கட்டமாக நில அளவை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கொடைக்கானல் பகுதியும் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் மூன்று வட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டி ருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த அளவை எந்தக் காலத்திற்குள் முடிவடையும்? காலம் நீட்டிக்கப்பட்டால் மற்ற வட்டங்களுக்கு மேலும் காலதாமதம் ஏற்படும். குறிப் பாக கொடைக்கானல், திண்டுக்கல், சிறுமலை பகுதிகளில் ரீ செட்டில்மென்ட் செய்ய வேண்டுமென்று நீண்டகாலமாக கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இப்போது நடைபெறும் இடங்களில் பணி எப்போது முடிவடையும்? மற்ற வட்டங்கள் எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, இந்த நில அளவை மேம்பாட்டுத் திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று 1979 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் அரசு ஒரு உத்தரவைப் போட்டு, இன்றைக்கு 28 வட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. 5 ஆண்டு களுக்குள் மாநிலம் பூராவிலும் இந்தப் பணியைச் செய்து முடிக்க வேண்டுமென்பது அரசின் திட்டம். அந்தவகையில் இப்போது பணி நடந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து மற்ற வட்டங்களும் எடுத்துக்கொள்ளப்படும்.

சோழவரம் மோட்டார் பந்தயத்திற்கு விற்கப்படும் டிக்கட்டுகள் மீது வரி.

*வினா எண் 359—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) சென்னை சோழவரத்தில் ஆண்டுதோறும் நடை பெறும் மோட்டார் பந்தயத்திற்கு விற்கப்படும் டிக்கட்டுகளின் மீது வரி விதிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு வரி விதிப்பின் மூலம் அரசுக்கு கிடைத்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எம். சின்னசாமி : தலைவரவர்களே, ஆண்டு(தோறும் நடைபெறுகின்ற இந்த மோட்டார் பந்தயத்தில் இலட்சக் கணக்கான டிக்கட்டுகள் விற்கப்பட்டு, அதன் மூலம் பெருமளவுக்கு வருமானம் இந்த தனியார் குழுவுக்கு அல்லது சங்கத்திற்கு வருகிறது. அதன் மீது வரி விதித்தால் அரசாங்கத்திற்கு நிறைய வருமானம் கிடைக்கும். எனவே, அடுத்த ஆண்டிலாவது இந்த யோசனையை அரசு பரிசீலனை செய்து, வரி விதிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, வருவாயை மட்டும் பார்க்காமல் சில கலைகளும், விளையாட்டுக்களும் நாட்டுக்கு வேண்டும் என்பதற்காகத்தான் அவற்றிற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே கேளிக்கை வரி என்பதைப் பொறுத்தவரையில் திரைப்படம், குதிரைப் பந்தயம் போன்றவைகளுக்குத்தான் விதிக்கப்படுகின்றது. ஆனால், சர்க்கஸ், இசை, நாடகம் விளையாட்டு போன்றவைகளுக்கெல்லாம் அவை நாட்டுக்கு வேண்டும் என்பதற்காகவும், வளர வேண்டும் என்பதற்காகவும் வரி விதிப்பிலிருந்து விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான் : தலைவரவர்களே, விளையாட்டு போட்டிகளுக்கு வரி விதிப்பதில்லை என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். விளையாட்டுப் போட்டிகளைப் பொறுத்தவரையில் எவை எவைகளுக்கு லாபம் கிடைக்கின்றது, எவை எவைகளுக்கு நஷ்டம் ஏற்படுகின்றது எனபதை எல்லாம் நன்றாகத் தெரிந்து அவற்றிற்குத் தக்கவாறு வரி விலக்கோ, வரி விதிப்போ செய்வது நல்லது. உதாரணமாக மோட்டார் பந்தயத்தில் எப்போதும் லாபம் கிடைக்கின்றது. அதே மாதிரி கிரிக்கெட் பற்றியும் சொன்னார்கள். கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிக்கு வரி போட வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் 30 இலட்சம் நஷ்டத்திலே இருக்கின்றது என்று சொல்லப்படுகின்றது. இந்த நிலையிலே சட்டத்தைக் காட்டிக் கொண்டு அதற்கு வரி போட வேண்டும் என்று சொல்கிறார்கள், இவை ரெக்ரியேஷன் ஆக்டிவிட்டிஸாக இருக்கின்றபோது இவற்றிற்கெல்லாம் வரி போட்டால் இவை அபிவிருத்தி அடையக் கூடிய ஒரு நிலை ஏற்படாது என்பதை அரசாங்கம் உணருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நான் முதலிலேயே தெரிவித்து விட்டேன், கலைகளும், விளையாட்டுகளும் நாட்டிற்கு வேண்டும், அவை வளர வேண்டும் என்பதற்காக அவற்றிற்கு வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது என்று.

1981 மார்ச் 4]

திரு. எம். சின்னசாமி : தலைவரவர்களே, இந்த மோட்டார் பந்தயத்திற்கு நிறையப்பேர் முண்டி அடித்துக் கொண்டு போகிறார்கள். ஆகவே இதை அரசே வைத்துக் கொண்டு டிக்கட் போட்டு விற்றால் நல்ல வருமானம் வரும். ஆகவே மோட்டார் பந்தயத்தை அரசே ஏற்று நடத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அதைப்பற்றி இதுவரையில் அரசு யோசிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இல. பலராமன் : தலைவரவர்களே, இதுபோன்ற பந்தயங்களை நடத்துகின்றபோது அரசு அங்கீகாரம் பெற்று அவைகளை நடத்துகிறார்களா ? அதனுடைய வரவு செலவுக் கணக்கை அரசு தணிக்கை செய்கின்றதா ? சோழவரம் மோட்டார் பந்தயத்தில் கடந்த ஆண்டு வந்த வருமானம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, கலைகளும், விளையாட்டுகளும் நாட்டிற்குத் தேவை என்பதாலும், அவை வளர வேண்டும் என்பதாலும் அவைகளுக்கெல்லாம் லைசன்சு முறை வைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டக் கல்லூரியில் மாலை நேர வகுப்பு

*வினா எண் 360 — திருவாளர்கள் சு. அங்குசாமி, த. வேணுகோபால் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டக் கல்லூரியில் மாலை நேர வகுப்புகளுக்கு மாணவர்களைச் சேர்க்கும் திட்டம் தற்பொழுது நிறுத்தி வைக்கப் பெற்றுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மாலை நேர வகுப்பைத் தொடர்ந்து நடத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) சட்டக் கல்லூரியில் மாலை நேர வகுப்புகளுக்கு மாணவர்களைச் சேர்க்கும் திட்டம் இந்திய வக்கீல்கள் ஆலோசனை சபையின் முடிவின்படி 1980—81 ஆம் ஆண்டு முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) அதனால் மாலைநேர வகுப்புகளைத் தொடர்ந்து நடத்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.